உ

கடவுள் துணை

# விநோத
# ஜாலக்கண்ணாடி.

## மூன்றாம்பாகம்.



இவை - சிறுமணவூர்
முனிசாமிமுதலியாராலியற்றப்பட்டு

இவை ௰ பாகம்வரையில்
அச்சிட்டிருக்கிறது
ஒரேகட்டடமாகவும்
பயிண்டு செய்யப்படும்

ஆதிபுரி
இரத்தினவேலுமுதலியாரது
வாணீவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது,

1896.

உ

கடவுள் துணை

# விநோதஜாலக்கண்ணாடி

காப்பு-விருத்தம்

பருவமதி செஞ்சடையாள் கிருபையாலும்
பராபரியே யென்தாயார் அருளினாலும்
சர்வமறை யதிகாரி வாணியாலும்
சண்முகமும் கணபதியு முதவியாலும்
திருமாலும் லட்சுமியாள் தீரத்தாலும்
தேன்போலே முன்னிரண்டு பாகஞ்சொன்னேன்
சிறுமணவூர்பேர்விளங்க முனிசாமித்தான்
செப்புகிறேன் இதுமூன்றும்பாகந்தானே.

குடம் தின்னுஞ் ஜாலம்,

பாரப்பா சிறுபூளை யென்றவேரும்
பண்பான குப்பையிட மேனிவேரும்
சேரப்பா வாயிலே மென்றடக்கி
சபையிலே வந்தொரு வார்த்தைகேளு
வாரப்பா குடம்நிறைய தண்ணீர்விட்டு
வைத்தருகே வுட்கார்ந்து குவளைக்கொண்டு
தூரப்பா ஜெலமெல்லாங் குடிக்கலாகும்
குடித்தபின்பு குடத்தையும் நீ தின்னலாமே

(வ-ம்) சிறுபூளையென்ற வேரும் குப்பைமேனி வேரும் வாயி, ல்போட்டு மென்று அடக்கிக்கொண்டால் ஒரு குடம் தண்ணீர் குடிக்கலாம் அந்தகுடத்தையும் தின்றுவிடலாம். 30

பால் உதிரமாகுஞ்ஜாலம்,

தின்னபின்பு யின்னமொரு ஜாலங்கேளு
திடுக்கிடுவார் கண்டவர்கள்திகைத்துநிற்பார்
பன்னவே தம்பலத்தின் பூச்சியப்பா
பசுவருந்தும் புல்லிலே கலந்துயீந்தால்

யின்னமடா பாலதனைக் கரந்தாராகில்
பாலெல்லாம் உதிரம்போல் சிவந்திருக்கும்
யென்னமோ தெய்வகுற்ற மென்றேசொல்லி
யெண்ணியே பலவிதமாய் கவனிப்பாரே,

(வ-ம்) தம்பலப்பூச்சியை கொண்டுவந்து புல்லில்கலந்து பசுவுக்குக்கொடுத்தால் அதைத் தின்றவுடன் பாலைக்கரந்தால் இரத்தநிறமாயிருக்கும் ஆரும் ஆச்சரியப்படுவார்கள்,

ஷை. உதிரத்துக்குமாற்று.

நினைப்பார்கள் பலவிதமாய் கவநிப்பார்கள்
நீயதற்கு மாற்றுடனே சொல்லக்கேளு
தனியாகத் தொட்டியிலே ஜெலத்தைவார்த்து
தயவாகச் சுக்குதனைத் தூளாய்செய்து
குணமாகஜெலத்திலே தூளைத்தாக்கி
குடிப்பாட்டிக்கரந்தாக்கால் வெளுத்துப்போகும்
பிணையாகயின்னமொரு வித்தைகேளு
பிரியமாய்சேழ்க்கவதை பேசுவேனே,

(வ-ம்.) ஒரு தொட்டியில் நல்லஜெலம் ஊத்தி சுக்குதூள்செய்துபோட்டுகலக்கி குடிப்பாட்டின பிறகுகரந்தால் பாலஎப்போதும்போல வெள்ளையாயிருக்கும்,

சங்கிலியுருவும் ஜாலம்-வேறுமுறை

வாகானபச்சையென்ற தவளைநெய்யும்
வளமானவெங்காயச் சாறுஞ்சேர்த்து
வேகமாம்குமரியுட சோறுங்கொண்டு
விதமானவெந்தியமும் உப்பும்சேர்த்து
பதமாகவிளக்கெண்ணை தனிலரைத்து
பருந்தணலில்சங்கிலியை காயப்போட்டு
மிதமாகயெண்ணைதனை கையால்வாரி
உருவடாசங்கிலிதான் யெறியும்பாரே.

(வ-ம்,)பச்சைத்தவளை நெய்யும் வெங்காயச்சாறும்கத்தாழைசோறும் வெந்தியமும் உப்பும் விளக்கெண்ணையில் கரைத்துநெருப்பில்காய்ந்த சங்கிலியை உருவினால் குப்பென்றுயெரியும்கைவேகாது.



முள்ளின்மேல் நடக்குஞ்ஜாலம்,

பாரப்பாஒரிலே தாமரையின்வேரும்
பாங்கானசெப்பு நெரிஞ்சென்றவேரும்

சேரப்பாதலேமாற்றி குளிசமாடி
 சிவசிவாகுளிசமதை வாயில்போட்டு
நேரப்பாமுள்ளின்மேல் நடக்கலாகும்
 நெருக்காதுபொத்தாது பூப்போலாகும்
ஆரப்பாயிம்முறையை செய்யமாட்டார்
 அனேகருக்குவழக்கமிது அறிந்துகொள்ளே,

(வ-ம்,)ஓரிலே தாமரையின்வேரும் செப்புநெறிஞ்சிவேறும் தலேமாற்றி செப்புகுளாயில்போட்டு குளிசமாடிவாயில்போட்டுக்கொண்டு முள்ளின்மேல் நடக்கலாகும், 34

## கோழிசண்டை ஜாலம்.

கொள்ளவேநத்தையென்ற சூரிதன்னே
 கொண்டுவந்துஒருமாதம் நீரில்போட்டு
விள்ளவேமாதமது சென்றெடுத்து
 வெண்ணேபோலஅரைத்துநல்ல சாவலுக்கு
உள்ளுக்குக்கொடுத்துசண்டை விட்டுப்பாரு
 ஒருகாலும்யெதிரியிதை வெல்லலாகா
அலலவேகத்திகட்டி விட்டபோதும்
 அறுபடாதுதோல்வியென்பதருமைதானே.

(வ-ம்)எத்தைச்சொன்னாலும் சேழ்க்கும் நத்தைச்சூரிவேருடணசமூலமுங் கொண்டுவந்து நீரில்போட்டு ஒருமாதம் சென்றுஎடுத்துசண்டைசாவலுக்கு கொடுத்து கத்திகட்டிவிட்டால் தோர்க்காது எதிர்சாவலுடைய கத்திபட்டாலும் அறுபடாது நத்தைச்சூரியைத் தனியாகவாவது ஆகாரங்களோடாவது உள்ளுக்கு செலுத்தவும். 35

## ஆடு துடருஞ் ஜாலம்.

தானென்றகோவையிட யிலேயுங்கொஞ்சம்
 தன்வேரேவடக்கோடும் வேறுங்கொஞ்சம்
வீனென்றசிறுநீர்விட்டரைத்துக்கொண்டு
 விதமாகக்கையிரண்டும் தடவிக்கொண்டு
கோவென்ற ஆடிருக்கும் யிடத்தைச்சேர்ந்து
 கொட்டப்பாகையிரண்டும் தட்டினுக்கால்
ஏனென்றுஆடெல்லாம் துடரும்பின்னே
 யெல்லாமேதந்திரம்பார் டீந்த்ரமேது

(வ-ம்,)கோவைசெடியின் வடக்கேபோகும்வேர் கொஞ்சமும்அதின்யிலே கொஞ்சமும் கொண்டுவந்து சிறுநீர்பெய்து நன்

ருயனைத்து இரண்டுகையிலிலும் மின்பின்னும்தடவிக்கொண்டு ஆடிருக்கும் யிடத்தில்போய் கைதட்டினால் பின்னால் துடரும்.

ஆடு எழுந்திராத ஜாலம்

ஏதென்று மந்திரத்தைப் பழிக்கவில்லை
  யிருக்குதடா மந்திரங்கால் மதியேமுக்கால்
தோதப்பா தேவாங்கு உரித்ததோலை
  துகளாக ஆடிருக்கும் யிடமேதேடி
போதப்பா குழிதோண்டி புதைத்தையானால்
  படுத்திருந்த ஆடெல்லாம் யெழுந்திராது
வாதப்பா சொல்லிநீ தெரிவிக்காதே
  வையகத்தில் மகாத்துமாக்கள் கோடியுண்டு

(வ-ம்.) தேவாங்கை கொண்டுவந்து உயிர்மாற்றி தோலையுரித்து ஆடிருக்கும்யிடத்தில் கொண்டுபோய் புதைத்தால் படுத்திருந்த ஆடுகள் எழுந்திராதாம்.

மிதியடி ஜாலம்.

கோடியிலே ஒருவனடா தொண்டுசெயதோன்
  குருவருளைப் பெற்றவனே அதிலேகோடி
ஆடவரும் நாடவரும் மதிக்கநீதான்
  அப்பனே குமிளில்லா மிதியடிக்கி
தேடியே விளாம்பிசினித் தூளாய்செய்து
  திருநீற்றி லேகலந்து அடியிற்றாவி
நாடியே காலிரண்டும் அலம்பியேறி
  நடக்கலாம் நாட்டிலுனை மதிப்பர்தானே.

(வ-ம்) விளாம்பிசினியை தூளாய்செய்து விபூதியில் மிச்சமாய்போட்டு கலந்துவைத்துக்கொண்டு குமிளில்லாத வெரும்பலகையாயுள்ள மிதியடியை கழுவிவைத்து இரண்டுகாலும் அலம்பி இந்த விபூதியை பலகைமேல்தூவி ஏறிநடக்கலாம்இது சிலர் செய்தே யிருப்பார்கள். 38

பசியில்லாத ஜாலம்.

நாட்டிலே உனைமதிக்க யின்னோர்வித்தை
  நாட்டுகிறே நண்பர்களே நயமாய்க்கேளீர்
வீட்டிலே யெட்டுநாள் அன்னாகாரம்
  வேண்டாமல் புசியாமல் இருக்கலாகும்
எட்டிலே புளிகினா னென்றுசொல்லி
  யேசாதே நாயுருவி விறையுழக்கு

வாட்டியே பசும்பாலை விட்டுக்கிண்டி
வருந்தினவன் யெட்டுநோ ளிருக்கலாமே.

(வ-ம்.) நாயுருவி விறைகொண்டுவந்து அரைத்து பசும்பாலை விட்டு கூழாக்கிசாப்பிட அன்னாகார மில்லாம லிருக்கலாம்ஆனால்இது சிவயோகிகளுக்கு தகும் மற்றவருக்கு திரோகம் ஊஷ்ணமாம். 39

ஓட்டமாய் ஓடுஞ்ஜாலம்.

ஆமெனவேவிழுதியிலை கொண்டுவந்து
அப்பனேவாயிலிட்டு மென்றடக்கி
ஓமெனவே ஒருமுணறு ரசம்முழிங்கி
ஓடலாம் எவ்வளவு தூரமேனும்
னுமெனவே யின்னொருவர் துடரமாட்டார்
துடர்ந்தாலும் யிளைத்தலுத்து சோர்ந்துபோவார்
நீயெனவே நிற்கவொரு யெண்ணங்கொண்டால்
நில்லப்பா காதவழி சென்றேயப்பால்

(வ-ம்.) விழுதியிலையை கொண்டுவந்துவாயில்போட்டு கசகசவென்றுமென்று அடக்கி துளிரசம் முழிங்கிமற்றதை வாயிலடக்கி ஓடினால் எவ்வளவுதூரம் ஓடினாலும் ஓடலாம் காதவழியும் வோடலாம் நிற்கவேணுமானால் ஏதாகிலும் ஒருமரத்தைப்பிடித்துதான் நிற்கவேணும். 40

இரும்பை ஒடிக்கும் ஜாலம்.

கும்மி.

இரும்புக்கம்பி தனையெடுத்து - அதை
யீணு கவாழை மரநடுவே
பொருநகமூன்றுநாள் வைத்துயெடுத்தால்
பொடியாயொடிக்கலாம் நேசர்களே.

(வ-ம்.) ஒருசிறியஇரும்புக்கம்பியை வாழமரத்து நடுவில்சொருகிவைத்து மூன்றுனாள்சென்று எடுத்துஒடித்தால் பளபளவென்று உடைந்துவிடும் 41

சுண்ணாம்பு தின்னுஞ்ஜாலம்.

சங்கம்விரைகொஞ்சம் வாயிலிட்டுநன்றாய்
சாரித்துமென்று குழப்பிக்கொண்டு
பங்கமில்லாமலேசுண்ணாம்புதின்னலாம்
பத்தினால்மாத்துண்டு நேசர்களே

(வ-ம்.) சங்கம்விறையை கொஞசம் வாயிலிட்டு கசகசவென்று மென்று சுண்ணாம்புதின்னலாம் உள்ளுக்குமுழுங்கக்கூடாது அதிகமாய் மென்றுவிட்டால் மாத்துண்டு. 42

அதற்கு மாற்று.

தின்பதுகொஞ்சமே சுண்ணாம்புசிலர்
தெரியாதமிச்சமாய் மென்றுவிட்டால்
துன்புறுமஞ்சள் உடனேவாயிலிட்டால்
துலைந்ததுகாரமும் நேசர்களே

(வ-ம்) சுண்ணாம்பை யதிகமாய்தின்று வாய்வெந்தால்உடனே மஞ்சளைவாயிலிட்டு கசகசவென்றுமென்றால் காரந்துலையும் தேங்காய்பில்லை தின்பதும்வழக்கம் 43

வாட்டிலோடுகடிக்குஞ் ஜாலம்

வேளைவேரைக்கொஞ்சம் வாயிலிட்டு அந்த
வாட்டிலோடு தன்னைக்கடித்தால்
பாலுஞ்சோறும்போலே மெல்லலாகுமிது
பார்த்தார்வெகுபேர்கள் நேசர்களே,

(வ-ம்) வேளைவேரை வாயிலிட்டு மென்று அடக்கிவாட்டிலோடுபீங்கானோடுகள் போட்டு கடிக்கலாம் மெல்லலாம் அரிசிபோல்மாவாய்விடும் வாய் அறுக்காது. 44

துணிகொளுத்துஞ் ஜாலம்,

சல்லாவைசாராயந்தனில்தோய்த்து நடுச்
சபையிலேவைத்துக்கொளுத்திவிட்டால்
உல்லாசமாக யெறிந்து அணைந்தபின்
உதறியெடுக்கலாம் நேசர்களே

(வ-ம்)ஒருசவுக்கத்தை சாராயத்தில் தோய்த்து சபையில்வைத்துகொளுத்திவிட்டால் அது எறிந்து அணைந்தபின் சவுக்கத்தை உதறிஎடுத்துக்கொள்ளலாம் 45

கோழிமுட்டை அழைக்குஞ்ஜாலம்

வெள்ளையென்றகுண்டுமணி செடியின்வேரும்
விதமானபாவட்டை யிலைதானப்பா
வெள்ளைநிறமாடப்புறு வெச்சத்தோடே
வேணுமடாபொன்னறி தாரந்தானும்
கொள்ளவேசமனிடையாய் கல்வத்திட்டு
கூட்டியேமைபோலேஅறைத்துக்கொண்டு
மெள்ளவே அண்டத்தில தடவிப்போடு
மேதினியில்புரளுமடா மந்திரமென்பார்

(வ-ம்) வெள்ளைகுண்டுமணி வடக்கோடும்வேரும்வெள்ளைமாடப்புறு பிச்சும் பொன்னரிதாரமும் பாவட்டையிலையும் சமனி

டைய ச்சேர்த்து அறைத்து முட்டைமீதில் தடவி வாசலில்வி
ட்டால் புரண்டுக்கொண்டேயிருக்கும் பார்ப்பவர்களெல்லாமந்தி
ரமென்பார் 46

### மூரத்தில்பொரி பொரிக்குஞ்ஜாலம்.

இதுபோலேமூச்சலொன்றுசெய்துக்கொண்டு
யிதற்கடியில்கள்ள அரை மறவாய்வைத்து
பதமாகப்பொரியதனை அறையில்போட்டு
பார்த்திருக்குஞ்சபையோர்க்கு நெல்லைக்காட்டி
மெதுவாகசபைதனிலே குந்திக்கொண்டு
மெல்லியதோர்சவுக்கத்தை கழுத்தில்கட்டி
விதமாகநீர்கொஞ்சந்தெளித்துக்கொண்டு
விடவிடெனறுகுலிக்கிடவே பொரியும்பாரே,

(வ-ம்) ஒருஜாண்கிகளத்தில் அதற்குத்தக்கின அகலத்தில் ஒருமுச்சல்செய்து அடியில் கள்ள அறையோடேமூடைய வேண்டியது அந்தகள்ள அறையில் புடித்தமட்டும் பொரியையபோட்டு வைத்துக்கொண்டு சபையில்வந்து உட்கார்ந்து ஒருசவுக்கத்தை கழுத்தில்கட்டி இரண்டுமுந்தாணியும்இரண்டுகால்பெருவிரலில் சுததிபிடித்துமேற்படி மூச்சலில் கொஞ்சம் நெல்லைப் போட்டு கொஞ்சம் தண்ணிதெளித்துபொரிபொரிப்பதுபோல கலகலவென்று குலிக்கிக்கொண்டிருந்தால் அடியிலிருக்கும் பொரியெல்லாம் கீழுமேலுமாய்துள்ளிமேலுக்குவந்துவிடும் பார்ப்பவர்க்கு ஆச்சரியமாயிருக்கும்

### தண்ணிநிற்குஞ் ஜாலம்

நடந்தபின்பு யின்னமொருஜாலங்கேளு
நல்லமயிரோசனையும் மூத்தக்காசும்
அடர்ந்ததொருநாற்கரந்தை யென்றவேரும்
அரசமரவேருடனே யிந்நான்கும்
குடத்துள்ளே சமனிடையாய் அரைத்துப்பூசி
குளங்கிணற்றில் ஜலமதனை மொண்டுவந்து
அடர்ந்திருக்குஞ்சபைதனிலே கவிழ்த்துக்காட்டில்
அணுவளவும்ஜலங்கீழே வீழாதாமே

(வ-ம்) மயிரோசனையும் நாற்கரந்தைவேரும் கோரைக்கிழங்கும்அரசமரத்தின்வேரும் சமனிடையாயெடுத்து அரைத்துக்குடத்துக்குள்ளேபூசிஜலத்தைமொண்டுசபையில்வந்துகீழ்மேலாய்க் கவிழ்த்து காட்டினால் துளிஜெலங்கூடகீழேவிழாதென்றுசொல்
லுகிறார் 48

மூன்றும்பாகம்-முற்றிற்று

———(*)———

## இனி நான்காம்பாகம்.